கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013
(யூலை/ஆகஸ்ட் 2015)

# GEOS 4204 அரசியற் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

யாதாயினும் நான்கு(04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
உலக புறவரிப்படம் வழங்கப்படும்.

---

01.(அ) புவியியலின் ஒரு பிரிவாக காணப்படும் அரசியற் புவியியல் கற்கை நெறி உலக அரசியல் பாங்குகளின் போக்குகளை விளங்கிக்கொள்வதற்கு எவ்வகையில் உதவுகின்றது. விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒரு அரசுக்கு இருக்க வேண்டிய முக்கிய கூறுகளைக் குறிப்பிட்டு, அவை எவ்வகையில் ஒரு அரசினது ஸ்திர தன்மைக்கும், வலுவின்மைக்கும் காரணமாக அமைகின்றன என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக.

(15 புள்ளிகள்)

02.(அ) எல்லைகள் என்பதனால் குறிப்பிடப்படுவது யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) எல்லைகள், முன்னரங்குகள் என்பவற்றை வரையறை செய்க.

(05 புள்ளிகள்)

(இ) ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் ஒழுங்கற்றதும், உறுதித் தன்மையற்றதுமான எல்லைகளினால் ஏற்படும் பிரச்சினைகளையும், இப்பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சர்வதேசம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், விளைவுகளையும் நாடுகளை உதாரணங்காட்டி விளக்குக.

(15 புள்ளிகள்)

03. கடல் வலயங்களை ஒழுங்காக விபரித்து கடல் எல்லையைக்கொண்டதொரு இறைமையுடைய நாட்டிற்கு இவ்வலயங்களில் உள்ள உரிமைகளையும் இக்கடல் வலயங்களில் சர்வதேசத்திற்குரிய உரிமைகளையும், வசதிகளையும் ஆராய்க.

(25 புள்ளிகள்)

04.(அ)அரசியற் புவியியலில் நீர் கற்ற இரண்டு நிலக்கோட்பாடுகள் பெயர்களையும் அக்கோட்பாடுகளை முன்வைத்த அறிஞர்கள் பெயர்களையும் முன்வைக்கப்பட்ட ஆண்டுகளையும் குறிப்பிடுக.

(06 புள்ளிக

(ஆ) நீர் குறிப்பிட்ட கோட்பாடுகளில் யாதாயினும் ஒன்றினை தெரிவுசெய் அக்கோட்பாட்டின் பிரயோகத்தன்மைகளையும், சிக்கல்களையும் ஏற்புடை நாடுகளை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

(19 புள்ளிக

05.(அ) இலங்கை - இந்திய உறவை புவிசார் கண்ணோட்டத்தில் ஆராய்க

(10 புள்ளிக

(ஆ)இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தினை உதாரணமாக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளிலு உட்கட்டமைப்பிலும், நம்பகத் தன்மையிலும் புதிய மாற்றங்கள், உத்வே போன்றவை வேண்டப்படுவது தொடர்பில் உமது கருத்தினை விளக்குக.

(15 புள்ளிக

06. பூகோள அரசியல் கட்டமைப்பு பல்துருவ நிலையில் இருந்து இரு து நிலைக்கு வந்து பின்னர் ஒரு துருவ நிலைக்குட்பட்டு இன்று பல் து சிக்கல் நிலையை அடைந்துள்ளது - ஆராய்க.

(25 புள்ளிக

*****